www.Padasalai.Net www.CBSEtips.in

இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2022

தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

பகுதி – அ

I. பலவுள் தெரிக. 10 x 1 = 10

1. 'ழ' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது. 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதைநூல், திருச்சாழல் இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரைநூல், குற்றாலக் கோவை
2. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை
3. 'Touch Screen' – கலைச்சொல் அறிக. அ) திறன் பேசி ஆ) தொடுதிரை இ) பிழை ஈ) அரசிதழ்
4. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க. அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்
5. 'அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்' யார் யாரிடம் கூறியது. அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம் இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னர் அமுதவல்லியிடம்
6. 'ஜனப்பிரளயம்' என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல் எது? அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை
7. 'நன்னாடு' – இலக்கணக் குறிப்பு தருக. அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உம்மைத் தொகை ஈ) எண்ணும்மை
8. நீரோடை – புணர்ச்சி விதி தருக. அ) ல ள வேற்றுமையில் வளவரின் நடவும் ஆ) உயிர்வான உக்குறள் மெய்விட்டோடும் இ) உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே ஈ) ஈறுபோதல்
9. பாரதிதாசனின் சாகித்திய அகாடெமி விருதுபெற்ற நூல் எது? அ) பிசிராந்தையார் ஆ) இருண்ட வீடு இ) சேரதாண்டவம் ஈ) பாண்டியன் பரிசு
10. பதிற்றுப்பத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இரண்டாம் பத்தினைப் பாடியவர் யார்? அ) கம்பர் ஆ) கபிலர் இ) இளங்கோவடிகள் ஈ) குமட்டூர்க் கண்ணனார்

பகுதி – ஆ

II. எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்க. 6 x 2 = 12

11. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?
12. உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?
13. செந்துறைப் பாடாண்பாட்டு துறை விளக்கம் எழுதுக.
14. பகுபத உறுப்பிலக்கணம் தருக. உண்டான் (அல்லது) ஆழ்க.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

www.Padasalai.Net www.CBSEtips.in

15. புணர்ச்சி விதி தருக. அமுதென்று (அல்லது) பயமில்லை.

16. வினாத் தொடராக மாற்றுக.
தஞ்சைக் கோவில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணியாகும்.

17. கலைச்சொல்லாக்கம் – பொருள் தருக.

18. தொடர் அமைத்து எழுது – அன்றொருநாள்

19. அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப்பெயர்களைக் கண்டறிக.
அ) வேவு பார்த்திடுவான் ; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி).....
ஆ) வந்தால் மகிழ்ச்சி இது ; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்).....

பகுதி – இ

III. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. **4 x 3 = 12**

20. ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

21. சேரநாடு செல்வ வளம் மிக்கது என்ற கூற்றிற்குரிய காரணங்களைக் குறிப்பிடுக.

22. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

23. உணவும் உறக்கமும் அணில் கனவாம் ; உங்கள் கனவைத் சொற்களில் விளக்குக.

24. ஃபிரெஸ்கோ ஓவியங்கள் ; கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

25. இலக்கிய நயம் பாராட்டுக.

தண்டலை மயில்கள் ஆட தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழா்வின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க
தெண்திரை எழினி காட்ட தேம்பிழி மதர யாழின்
வண்டுகள் இனிது பாட மருதம் வீற்றிருக்கும் மாதோ
– கம்பர்

பகுதி – ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. **2 x 6 = 12**

26. அ) 'கல்லும் கதை சொல்லும்' என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக. **(அல்லது)**
ஆ) பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

27. அ) சிம்பொனித் தமிழரும் ஆஸ்கார் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை விவரிக்க. **(அல்லது)**
ஆ) 'காற்றில் கலந்த பேரோசை' என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எவ்வாறு பொருந்தும் என்பதை விளக்குக.

பகுதி – உ

அடிமாறாமல் எழுதுக. **1 x 4 = 4**

28. 'சிற்றூரும்' எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதி பாவகையினைக் குறிப்பிடுக.

Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593